# ஏன்
# பரிசுத்தமாக வேண்டும் ?



உங்கள் வாழ்க்கையை வளமாக்கும்
வல்லமையான தேவசெய்தி

J. சாம் ஜெபத்துரை

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*
*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

# ஏன் பரிசுத்தமாக வேண்டும்?
(HOLINESS - WHY?)

A. Devaraj Pitchaimoni, M.Sc.,M.Phil.,
4/145, Second Main Road
Shanthi Nagar
Tirunelveli-627002.

J. சாம் ஜெபத்துரை

வெளியிடுபவர்:
J. சாம் ஜெபத்துரை
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

முதற் பதிப்பு : பெப்ருவரி 1994
நன்கொடை ரூ. 5/-
வெளியீடு எண் : 342

இந்தப் புத்தகத்தை வெளியிட உதவி செய்தவர்களை வாழ்த்துகிறோம், ஆசீர்வதிக்கிறோம்!

Mr. K. John Paul & Family
Tiruvalam, N.A.Dt

கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக.

அச்சிட்டோர்:-
ஒரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

## அத்தியாயம் 1

# ஏன் பரிசுத்தம் தேவை?

''அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய் யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக் கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்த முள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிர மாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வரு கிறது'' (வெளி 22:11,12).

பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்! நம் பரிசுத்தத்தை தேவபக்தியோடு பூரணப்படுத்த வேண்டிய கடைசி நிமிட நேரத்தில் நின்று கொண்டிருக்கிறோம். கர்த்தருடைய வருகை மிகவும் சமீபமாகிவிட்டது. இனி அதிக காலம் இல்லை!

நமக்கு முன்பாக அநேக பரிசுத்தவான்கள் தங்களு டைய ஓட்டத்தை வெற்றியோடி ஓடி முடித்து மகிமையில் பிரவேசித்திருக்கிறார்கள். இது நம்முடைய கடைசி நேரம். கர்த்தருடைய ஆவியானவர் நமக்கு சொல்லுகிற ஆலோசனை என்ன? பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்த மாகட்டும் என்பதே!

மற்றவர்களைப் பார்த்துக் கொண்டிருக்க இது நேரம் அல்ல. சோதோமில் குடியிருக்க இனி சந்தர்ப்பமும் இல்லை. இரட்சிப்பின் பேழைக்குள் ஓடி வர வேண்டிய நேரம். கிருபையின் வாசல்கள் அடைக்கப்பட்டு போகிற ஒரு நேரம். கர்த்தருடைய வருகையிலே காணப்பட நமக்கு பரிசுத்தம் மிகவும் அவசியம்!

கடந்த சில மாதங்களாக கர்த்தர் பரிசுத்தத்தைக் குறித்து அதிகமாய் என்னிடத்தில் பேசினபடியினால் பரிசுத்தத்தை வலியுறுத்தி புத்தகம் எழுத தீர்மானித்

தேன். இந்த புத்தகம் நிச்சயமாகவே உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்திற்கு மிகவும் பிரயோஜனமாக அமையும்.

கர்த்தர் கிருபையாக கொடுத்திருக்கிற இந்த நாளிலே தேவ சமுகத்திலே காத்திருந்து சுத்திகரித்து உபவாசித்து இன்னும் பரிசுத்தமாகும்படி ஒப்புக்கொடுப்போமாக. ஆவியானவர் பரிசுத்தத்தைக் குறித்து அதிக வைராக்கிய முடையவராய் இருக்கிறார்.

பரிசுத்தத்தை நேசியுங்கள், பரிசுத்தத்தில் அன்புகூருங்கள், பரிசுத்தத்தை வாஞ்சையோடு நாடுங்கள். பரிசுத்தத்தின்மேல் பசி தாகம் உடையவர்களாய் இருங்கள், பரிசுத்தத்தில் பூரணப்படுங்கள்.

எல்லாவற்றுக்கும் ஒரு எல்லை உண்டு. ஆனால் பரிசுத்தத்திற்கோ எல்லை இல்லை. பரிசுத்தத்தை வாஞ்சிக்கிறவன் பரிசுத்த பாதையில் முன்னேறி செல்லக்கடவன். பரிசுத்த முள்ளவர்கள்தான் கர்த்தருடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்கள்!

ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் கர்த்தர் நமக்குப் பரிசுத்தத்தைக் கற்று கொடுக்கிறார். நாம் நிதானித்து ஆராய்ந்து படித்து நம்மை பரிசுத்தத்திற்காக ஒப்புக்கொடுக்கும்போது பரிசுத்தத்தில் பூரணமடைய முடியும்.

ஏதோ தேர்ச்சி பெற்றால் போதும், நாற்பது மதிப்பெண்கள் பெற்றால் போதும் என்று திருப்தியடைந்து விடக்கூடாது. நூற்றுக்கு நூறு நாம் பூரணமடைய வேண்டும். கர்த்தர் எதிர்பார்க்கிற பூரண அளவுக்கு கடந்து வரவேண்டும்!

காலத்தை பார்த்து போதிக்கிறவர்களாய் இருக்க வேண்டிய உங்களுக்கு பாலைக் கொடுக்கத்தக்கதாய் நீங்கள்

பாலே உன்னதத்தக்கதாய் இருக்கிறீர்களே என்று அப்போஸ்தலனுகிய பவுல் வேதனைப்பட்டார்.

இந்த இருபதாம் நூற்றுண்டின் கிறிஸ்தவ திருச்சபையின் நிலைமை என்ன? உலக செழுமைகளைதான் நோக்கிப் பார்க்கிறுர்களே ஒழிய பரிசுத்தத்தை நோக்கிப் பார்ப்பதில்லை. நாம் மனம்போல வாழ்ந்துவிட்டு ஆலயத்திற்கு வந்து ஏதோ கைத் தட்டி பாட்டுபாடி இரண்டு வார்த்தைகள் அந்நிய பாஷையிலே பேசிவிட்டால் போதும் என்று எண்ணுகிறுர்கள்.

சரீரப் பிரகாரமாய் வாழ்ந்திருக்கிறுர்களே ஒழிய ஆவிக்குரிய வாழ்க்கையில் குழந்தையாகவே இருக்கிறுர்கள். பரிசுத்தத்தைக் குறித்து சரியான போதனை இல்லாததினுல் அவர்களுடைய ஆன்மீக வாழ்க்கை தள்ளாடுகிறது

நாம் ஏன் பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்பதைக் குறித்து இந்த புத்தகத்தில் சற்று சுருக்கமாக நாம் தியானிக்கப்போகிறேம். ஜெபத்தோடுகூட படியுங்கள். கர்த்தர் இந்த செய்தியை உங்களுக்கு ஆசிர்வதித்து தருவார்.

# பரிசுத்த அழைப்பாயிருக்கிற படியால்!

"தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" (I தெச 4:7).

ஏன் நமக்கு பரிசுத்தம்? ஏனென்றால் அதுதான் நமது அழைப்பு!

ஆண்டவர் நம்மை ஒரு பெரிய அழைப்பினால் அழைத்திருக்கிறார் உன்னத அழைப்பினால் அழைத்திருக்கிறார். பரம அழைப்பினால் அழைத்திருக்கிறார். அந்த அழைப்பு என்ன? ஆம் பரிசுத்தத்திற்கே நம்மை அழைத்திருக்கிறார். பரிசுத்த ஜனமாய், பரிசுத்த ஜாதியாய், பரிசுத்த கூட்டமாய் தேவசந்நிதானத்திலே என்றென்றைக்கும் நிற்கும்படி அழைத்திருக்கிறார்.

அந்த அழைப்பு பூமியிலே நாம் பரிசுத்தமாய் வாழ வேண்டும், நித்தியத்திலே பரிசுத்தவான்களின் தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள வேண்டுமென்பதுதான்.

வேதத்தை வாசித்தால் ஆண்டவர் பல காரியங்களுக்கு நம்மை அழைத்திருக்கிறதை அறியலாம் நாம் ஊழியத்திற்காக அழைக்கப்பட்டிருக்கிறோம் உண்மைதான். பாடுபடுவதற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம் உண்மைதான். சமாதானமாய் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம் உண்மைதான்.

தேவனோடு ஐக்கியம் கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறோம், அவரோடு போஜனம் பண்ண அழைக்கப்பட்டிருக்கிறோம், அவருடைய தீர்க்கதரிசியாக, ஆசாரியர்களாக, ராஜாக்களாக அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இப்படி பல காரியங்களுக்காக ஆண்டவர் நம்மை அழைத்திருந்தாலும் அவைகளின் மத்தியிலே இன்னும் மேன்மையான அழைப்பை நமக்குத் தருகிறார். பரிசுத்தமாய் ஜீவிக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். அது அழைப்பு மட்டுமல்ல கட்டளையும் கூட!

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய நிருபங்களில் எல்லாம் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது என்ற வார்த்தை திரும்பத் திரும்ப வருகிறதைக் காணலாம் (I கொரி 1:2). பரிசுத்தத்திற்கென்று அழைக்கிறார். அதோடு இணைத்து சொல்லுகிறார் பரிசுத்தவான்களாகும்படி அழைத்திருக்கிறார்.

பழைய ஏற்பாட்டிலே ஆசாரியர்களை கர்த்தர் பரிசுத்த ஆசாரியக் கூட்டம் என்று அழைத்தார். ஆசாரியர்களின் மத்தியிலே பிரதான ஆசாரியனிடத்தில் கர்த்தர் அதிகமான பரிசுத்தத்தை எதிர்பார்த்தார். பிரதான ஆசாரியனுடைய நெற்றியிலே பொன்னினால் செய்யப்பட்ட பட்டையில், "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்ற எழுத்து பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

நெற்றி என்பது நம்முடைய சிந்தனைகள், எண்ணங்கள், நினைவுகள் எல்லாம் தங்கியிருக்கிற ஒரு இடம். நம் பரிசுத்தமானது நம் சரீரம் முழுவதும் பரிசுத்தமாய் இருக்க வேண்டும். வேர் பரிசுத்தமாய் இருந்தால் மரம் முழுவதும் பரிசுத்தமாய் இருக்கும் அல்லவா?

பரிசுத்தம் என்பது ஏதோ ஆசாரியர்களுக்கும் ஊழியர்களுக்கும் மட்டுமல்ல, எல்லோருக்கும் உரியது! பரிசுத்தத்திற்கான அழைப்பை கர்த்தர் ஒவ்வொரு ஆணுக்கும் கொடுக்கிறார், பெண்ணுக்கும் கொடுக்கிறார், சிறியவர்களுக்கும் கொடுக்கிறார், பெரியவர்களுக்கும் கொடுக்கிறார், ஊழியர்களுக்கும் கொடுக்கிறார், விசுவாசிகளுக்கும் கொடுக்கிறார்.

தேவனுடைய பிள்ளையே, உன்னுடைய ஒவ்வொரு இருதய துடிப்பும் பரிசுத்தம் பரிசுத்தம் என்று துடித்துக் கொண்டே இருக்கட்டும். ஏனென்றால் உன் அழைப்பு மேன்மையான உன்னதமான பரிசுத்த அழைப்பாகும்.

உபா 7:6-ல் கர்த்தர் சொல்லுகிறார்: "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்."

சற்று சிந்தித்துப் பாருங்கள். நம் தேசத்தில் ஏறக்குறைய நூறுகோடி மக்கள் வாழுகிறார்கள். அதில் நம்மை தமக்கென்று தெரிந்துகொண்டது பாக்கியம் அல்லவா? நம்முடைய குடும்பத்திலே தமக்கென்று தெரிந்து கொண்டு மீட்டு எடுத்திருக்கிறாரே எத்தனை பேருக்குக் கிடைக்கக்கூடாத விசேஷமான அழைப்பு அது!

ஒரு வேடிக்கையான கதை ஒன்றை சொல்லுவார்கள். ஒரு பன்றியும், ஒரு ஆடும் ஒரு பாலத்தின்மேல் நடந்து போனது. கீழேப் பார்த்தால் சாக்கடை. இரண்டும் தவறி கீழே விழுந்துவிட்டது. சாக்கடையில் விழுந்த பன்றிக்கோ ஒரே ஆனந்தம். ஆ இது என்ன அருமையான சாக்கடை இதைப்போல் வேறு சாக்கடை உண்டோ நான் இதில் மனம் மகிழ்ந்து குளித்து மகிழப் போகிறேன் என்று சொல்லி பன்றி ஆனந்தமாய் சாக்கடையில் குளித்தது.

ஆனால் அந்த ஆடு என்ன செய்தது தெரியுமா? ஐயோ இந்த சாக்கடையைவிட்டு நான் எப்பொழுது வெளியே வருவேன் என்று மூக்கை பிடித்துக்கொண்டு வெளியே வந்தது. வெளியே வந்ததும் உடலை எல்லாம் உதறி உலர்த்தியது. உடனடியாக தன்னை சுத்திகரித்துக்கொண்டது. காரணம் அதற்கு அழுக்கோ சாக்கடையோ பிடிக்கவே பிடிக்காது.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, நாம் பன்றிகள் அல்ல ஆடுகள். பாவ சாக்கடை நமக்குச் சந்தோஷமாய் இருக்கக்கூடாது. தப்பி தவறி விழுந்து விட்டால் கூட பாவத்தை உதறி எழுந்து கர்த்தரிடத்தில் வந்துவிட வேண்டும். தேவ சமுகத்திலே நின்று சுத்திகரித்து கொள்ள வேண்டும்.

தாவீது ஒருமுறை பாவத்தில் விழுந்துவிட்டார். அவருடைய உள்ளம் அப்படியே நொந்துபோனது. 51 ம் சங்கீதத்தை வாசித்துப் பாருங்கள். அவர் எப்படி கதறி கதறி சாக்கடையை எல்லாம் தன்னைவிட்டு நீங்கிப்போகும்படி தன்னைச் சுத்திகரித்துக்கொண்டார் என்பதை நாம் அறியலாம். கர்த்தர் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த அந்த பரிசுத்த அழைப்பை சிந்தியுங்கள், தியானியுங்கள். கர்த்தர் அழைத்த அந்த அழைப்புக்கு பாத்திரவான்களாகக் காணப்பட உங்களை பிரதிஷ்டை செய்யுங்கள். வேலை செய்யும்போதும், பிரயாணம் செய்யும் போதும் பரிசுத்த நினைவாகவே இருங்கள்.

பரிசுத்த அழைப்பை உணருகிறவன் அசுத்தத்தை வெறுத்தே ஆகவேண்டும். தேவனுடைய நாமத்தை பரிசுத்த குலைச்சல் ஆக்குகிற எதுவாயிருந்தாலும் சரி தீர்மானத்தோடு அதைவிட்டு விலக வேண்டும். பரிசுத்த வாழ்க்கையை நேசிக்கிறவர்கள் வேறுபாட்டின் ஜீவியத்தை மேற்கொள்ளுவார்கள்.

ஒரே வீட்டில் இஸ்மவேலையும் ஈசாக்கையும் வைத்திருப்பது என்பது இயலாத காரியம். பல வேளைகளில் நாமே பல இஸ்மவேல்களை உருவாக்கி விடுகிறோம். தீர்மானத்தோடு இஸ்மவேலை வெளியே அனுப்பும்போது கவலைகளும், வேதனைகளும் உள்ளத்தில் இருக்கத்தான் செய்யும். ஆனாலும் பரிசுத்தத்தை நேசிக்கிறவர்கள் கர்த்தருக்கு பிரிய

மில்லாத உறவுகளையும், உலக நேசங்களையும் உள்ளத்தை விட்டு அப்புறப்படுத்தியே தீரவேண்டும். பழைய புளித்த மாவை களைந்தால்தான் புதிய மாவு நம்மில் கிரியை செய்யும்.

தேவபிள்ளையே, பரிசுத்தத்திற்காக ஜெபத்தோடு உன் வாழ்க்கையை ஆராய்ந்துப் பார்த்து விலக்க வேண்டியவைகளை விலக்குவாயாக. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் சம்பந்தம் இல்லை. இருளுக்கும் ஒளிக்கும் ஐக்கியம் இல்லை.

ஒருவன் ஒருபோதும் பழைய திராட்சரசத்தை கொண்டுபோய் புதிய துருத்திகளில் வைத்திருக்க மாட்டான். கோடி துண்டை கொண்டுபோய் பழைய துண்டோடு இணைத்திருக்க மாட்டான்.

கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாய் இருக்கிற நீ பழையவைகள் எல்லாவற்றையும் ஒழித்துவிட வேண்டும். எல்லாம் புதிதாக வேண்டும். ஏனென்றால் உன்னுடைய அழைப்பு பரிசுத்தமானது. அது கர்த்தருடைய அழைப்பு. ஆகவே நாம் கண்டிப்பாய் அதை கைக்கொண்டே தீர வேண்டும்.

இப்பொழுது ஒரு நிமிடம் வாசிப்பதை நிறுத்தி உன்னை ஆராயந்து பார்ப்பாயா? அகற்ற வேண்டியவைகளை எண்ணிப்பார்த்து தீர்மானத்தோடு அகற்றுவாயா?

உன் அழைப்பு பரிசுத்தமானது!

அத்தியாயம் 3

# அழைத்தவர் பரிசுத்தரானதால்!

''நான் உங்கள் தேவனாயிருக்கும்படி உங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக''
(லேவி 11:45)

நம் அழைப்பு பரிசுத்த அழைப்பு. நம்மை அழைத்த தேவனும் பரிசுத்த தேவன். அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுகிறதை கவனித்துப் பாருங்கள். உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்
(I பேதுரு 1:15).

உங்களுடைய கண்களை சற்றே திருப்பி உங்களை அழைத்த பரிசுத்த தேவனைப் பாருங்கள். அவருடைய பரிசுத்த அழகைப் பாருங்கள். அவருடைய பூரணத்தை பாருங்கள். அவரே நம்முடைய முன்மாதிரி. அவரே நம்முடைய தகப்பன். அவர் பரிசுத்தர்.

லேவியராகமம் முழுவதையும் வாசித்துப் பார்த்தால் அங்கே கர்த்தர் தன்னைக் குறித்து எப்படி மீண்டும் மீண்டும் பரிசுத்தர் என்று சொல்லுகிறதைக் காணலாம். லேவி 11:45; லேவி 19:2; லேவி 20:7, லேவி 20:26 ஆகிய வசனங்களில் ''நான் பரிசுத்தராகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்'' என்று திரும்பத் திரும்ப சொல்லுகிறதைக் காணலாம். நம்முடைய பரிசுத்த வாழ்க்கைக்கு தேவன் பரிசுத்தராயிருக்கிறார். பரிசுத்தமாயிருக்கிற தேவனுக்கு ஒரு பரிசுத்தக் கூட்டம் தேவை!

அன்றைக்கு அதற்காகவே கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்து தேசத்திலிருந்து வேறு பிரித்துக் கொண்டு வந்தார். எகிப்து என்பது பாவ ஜீவியத்தைக் காண்பிக்

கிறது. பாவ ஜீவியத்திலிருந்து நம்மை வெளியே கொண்டு போக நமக்காக அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியாக மாறினர்.

நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி பரிசுத்தமாகும்படி தன்னுடைய சொந்த இரத்தத்தையே ஊற்றிக் கொடுத்தார். ஏன்? பரிசுத்தத்தில் நம்மை முன்மாதிரியாக்குவதற்காக. தனக்கு ஒரு பரிசுத்த ஜனங்கள் உண்டு என்பதை உலகத்திற்கு அறிவிப்பதற்கு.

நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (லேவி 20:26).

ஒரு நாள் ஏசாயா ஆண்டவரை தரிசித்தார். கர்த்தர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தில் வீற்றிருக்கிறதைக் கண்டார். அவரைப் பார்த்ததும் ஏசாயாவின் உள்ளத்தை தொட்ட தேவனுடைய குணநிசயம் என்ன தெரியுமா? பரிசுத்தம் என்பதாகும். சேராபீன்கள் எல்லாம் அவருக்கு முன்பாக நின்று கொண்டு பரிசுத்தம் என்ற குணநிசயத்தைத்தான் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தார்கள்

அதைப்போல வெளி 4:8-ஐ வாசித்துப் பாருங்கள். இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தார்கள்

அவர் அன்புள்ளவர் அன்புள்ளவர் அன்புள்ளவர் என்று சொல்லியிருந்திருக்கலாம். இரக்கமுள்ளவர் இரக்கமுள்ளவர் இரக்கமுள்ளவர் என்று சொல்லியிருந்திருக்கலாம் அல்லது தயவுள்ளவர், கருணை உள்ளவர், மனதுருக்கம் உள்ளவர் என்று சொல்லியிருந்திருக்கலாம். ஆனால் அவரை பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்றே

துதித்தார்கள். அதிலும் மூன்றுமுறை திரும்பத் திரும்ப சொல்லுகிறதைக் காணலாம்.

ஏன் மூன்றுமுறை சொல்லுகிறார்கள். ஏனென்றால் பிதாவாகிய தேவன் பரிசுத்தர், குமாரனாகிய தேவன் பரிசுத்தர், பரிசுத்த ஆவியாகிய தேவன் பரிசுத்தர்.

மட்டுமல்ல, திரியேகத்தின் இந்த மூன்று மட்டும் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை பரிசுத்தமாய் பாது காக்கிறது.

I தெச 5:23-ஐ வாசித்துப் பாருங்கள். "சமாதானத் தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கு வாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம் முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்ற மற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக."

நம் தேவனை பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று மூன்றுமுறை துதிக்கிறோம். ஏனென்றால் அவர் நம் ஆவியிலே பரிசுத்தத்தைக் கொண்டு வருகிறார் ஆத்துமா வில் பரிசுத்தத்தைக் கொண்டு வருகிறார். சரீரத்தில் பரி சுத்தத்தைக் கொண்டு வருகிறார். நாம் முற்றிலும் பரி சுத்தராய் மாறுகிறோம்

இந்த உலகத்தில் ஆயிரக்கணக்கான மார்க்கங்கள் இருக்கலாம். கோடிக்கணக்கான தெய்வங்கள் இருக் கலாம். ஆனால் அவைகளில் பரிசுத்தமான தெய்வம் யார் உண்டு? நம் கர்த்தரிடத்தில் மாத்திரம்தான் நாம் அந்த பரிசுத்தத்தைக் காணலாம். ஆதியாகமத்திலிருந்து வெளிப் படுத்தின விசேஷம் வரையிலும் வாசித்துப் பாருங்கள். எல்லாம் கர்த்தருடைய பரிசுத்தத்தைப் பற்றியே பேசு கிறது.

மோசே கர்த்தருடைய பரிசுத்தத்தையும், மற்ற தெய்வங்களின் பரிசுத்தத்தையும் ஒப்பிட்டு பார்த்தார். முடிவில் சொன்னார் கர்த்தாவே, தேவர்களில் உமக்கு-

ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? (யாத் 15:11).

மோசே ஒப்பிடுகிற குணாதிசயத்திலே முதலாவது காரியம் கர்த்தர் பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர். இரண்டாவது துதிகளில் பயப்படத்தக்கவர். மூன்றாவது அற்புதங்களைச் செய்கிறவர் நம்மை அழைத்த தேவன் பரிசுத்தர்.

இயேசுகிறிஸ்து பிதாவாகிய தேவனை அழைக்கும் போது பரிசுத்த பிதாவே என்று அழைக்கிறதைக் காணலாம் (யோவா 17:11) ஆதி அப்போஸ்தலர்கள் ஜெபம் பண்ணும்போது பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே ஜெபிப்பதைக் காணலாம் (அப் 4:30).

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, தேவனுடைய குணாதிசயங்களிலே பிரதான குணாதிசயம் பரிசுத்தம் என்பது மட்டுமல்ல அவர் தம்முடைய பிள்ளைகளைக் குறித்துக் கொண்டிருக்கிற விருப்பமும் அதுதான். ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் இருக்க வேண்டிய முதல் அறிவு நம் தேவன் பரிசுத்தர் என்று அறிகிற அறிவு தான். ஞானி சொல்லுகிறார்: "பரிசுத்தரை அறிகிற அறிவே அறிவு"

# தேவனை தரிசிக்கும்படியாக!

"பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்ப தில்லையே" (எபி 12:14).

தேவனைத் தரிசிக்க வேண்டுமென்றால் நமக்குள் பரிசுத்தம் அவசியம் அசுத்தத்தை வைத்துக்கொண்டு, துன்மார்க்கமாய் ஜீவித்துக்கொண்டு, உளையான சேற்றில் மெய்மறந்து கொண்டு தேவனைத் தரிசிக்க முடியாது.

உங்களுடைய ஜெப நேரத்தில் ஆண்டவரைத் தரிசிக்க வேண்டுமென்றாலோ அல்லது வருகையில் அவரைத் தரிசிக்க வேண்டுமென்றாலோ நமக்கு பரிசுத்தம் மிகவும் அவசியம்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் (மத் 5:8).

ஒரு ராஜாவின் கலியாண வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டுமா? தூய்மையான ஆடை அணிந்திருக்க வேண்டும் பிரசித்தி பெற்ற பேங்கில் பணியாற்ற வேண்டுமா? தூய்மையான ஆடைகளை அணிந்திருக்க வேண்டும். அப்படியானால் பரிசுத்த வஸ்திரம் இல்லாமல் தேவனுடைய பிரசன்னத்தில் செல்லுவது எப்படி? தேவனைத் தரிசிப்பது எப்படி?

கர்த்தர் ஆதாம் ஏவாளைச் சிருஷ்டித்ததோடு பரிசுத்தத்தோடு உருவாக்கினார். பரிசுத்தமான மகிமை அவர்களை மூடிக்கொண்டிருந்தது. அவர்கள் தேவனை எப்போதும் தரிசித்தார்கள், அவரோடு உலாவினார்கள், அவரோடு சம்பாஷித்தார்கள்.

ஆனால் ஒருநாள் பாவம் அவர்களுடைய வாழ்க்கையில் பிரவேசித்தது. தேவனைத் தரிசிக்க முடியாமல்

விருட்சங்களுக்குள்ளே போய் ஒளிந்து கொண்டார்கள். ஆம் பாவம் நம்மை பரிசுத்தருள்ள தேவனைவிட்டு பிரித்து விடுகிறது. ஏசா 59:2 சொல்லுகிறது: "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது."

தேவபிள்ளையே, பாவமும் அக்கிரமமும் தேவனைவிட்டு உன்னை பிரித்துவிட கூடியதாகையினால் அவைகளை உன் வாழ்க்கையை விட்டு அப்புறப்படுத்தி விடு. பரிசுத்தத்தை உன் வாழ்க்கையில் அப்பியாசப்படுத்து. அப்பொழுது நீ தேவனைத் தரிசிப்பாய்.

பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களின் வாழ்க்கை வரலாற்றை எல்லாம் வாசித்துப் பாருங்கள். அவர்கள் தேவனோடு சஞ்சரித்தார்கள், தேவனோடு நடந்தார்கள், ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தார் (ஆதி 5:24).

நோவா தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தார் (ஆதி 6:9). ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதன் என்று அழைக்கப்பட்டார் (யாக் 2:23).

தேவனாகிய கர்த்தர் மோசேயோடு முகமுகமாய் பேசினார். ஒரு சிநேகிதனோடு பேசுவதுபோல பேசினார் என்றெல்லாம் வேதத்தில் நாம் வாசிக்கிறோம்
(யாத் 33:11).

தேவனுடைய பிள்ளையே, தேவனைத் தரிசிப்பதும் தேவனோடு நடப்பதுமே உன் வாழ்க்கையின் நோக்கமாய் குறிக்கோளாய் இருக்கட்டும். இங்கேயும் நாம் தேவனைத் தரிசிக்க வேண்டும், நித்தியத்திலும் அவரைத் தரிசிக்க வேண்டும். பரிசுத்தமாய் வாழ்ந்தால்தான் அவரைத் தரிசிக்க முடியும்.

காணிக்கையும் தசமபாகத்தையும் கொடுப்பதினாலே தேவனைத் தரிசித்து விட முடியாது. ஆத்துமாக்களை ஆதாயம் செய்வதினால் அவரைத் தரிசித்துவிட முடியாது. இரவும் பகலும் ஓடி ஓடி உழைத்துவிடுவதினால் அவரைத் தரிசித்துவிட முடியாது. பரிசுத்தமாய இருந்தால் மாத்திரம் அவரைத் தரிசிக்க முடியும்.

தேவனைத் தரிசிக்க வேண்டுமென்கிற வாஞ்சை தாவீதுக்கு இருந்தது. அவர் எழுதுகிறார்: தேவனே, நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப் பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன் என்று எழுதுகிறார் (சங் 63:1,2).

உம்மைப் பார்க்க ஆசையாயிருந்தேன் என்று அவர் அன்போடு குறிப்பிடுவதைப் பாருங்கள். கர்த்தரை தரிசிக்க அவருடைய பொன்முகத்தைப் பார்க்க ஏக்கமும் வாஞ்சையுமாய் இருப்பது எத்தனை பாக்கியமான அனுபவம். தன் பிள்ளைகளை நீண்ட நாட்களாய் பிரிந்து வாழுகிற தாய் பிள்ளைகளைப் பார்க்க எவ்வளவு ஆவல் கொண்டிருப்பாள். நண்பர்களைப் பார்க்கும்போது நாம் அப்படிதானே சொல்லுகிறோம். "உங்களைப் பார்க்க ஆசையாய் இருந்தது!"

அதற்காக தாவீது ராஜா சொல்லுகிறார், "அதிகாலமே உம்மைத் தேடுகிறேன். தேவனே, நீர் என்னுடைய தேவன்" என்றெல்லாம் சொல்லுகிறார். தேவனுடைய பிள்ளையே, அதிகாலையில் எழும்பி கர்த்தருடைய பொன் முகத்தைத் தேடு. அவரைத் தரிசிக்கும்படி அவரை கிட்டிச் சேருவாயாக.

இயேசுவினுடைய வாழ்க்கையைப் பாருங்கள். அவர் அதிகாலமே வாஞ்சையோடு பிதாவின் முகத்தைத் தேடினார். அதிக இருட்டோடே எழுந்து சென்றார். இஸ்ரவேல் தேசத்தில் அதிகாலை வேளை எழும்பி நடப்பது சற்று கடினம்தான்.

ரோடுகளில் விளக்கு வசதி கிடையாது. ஆங்காங்கே ஒட்டகங்கள் கட்டப்பட்டிருக்கும். இங்கும் அங்கும் பாதை தேடி கண்டு பிடிப்பது கடினமான காரியம் கள்ளர் பயமும் அதிகம் அல்லவா?

இயேசுகிறிஸ்து அதிக இருட்டோடே தேவனைத் தரிசிக்க நடந்து சென்றார் என்றால் நாம் பரிசுத்தமுள்ள தேவனைத் தரிசிக்க எவ்வளவு அதிகமாக வாஞ்சைக் கொள்ள வேண்டும்.

ஆண்டவரைத் தரிசிக்க முடியாதபடி நமக்கும் ஆண்டவருக்கும் இடையிலே என்ன குறைபாடுகள் இருந்தாலும் இன்றைக்கே அதை தீர்மானத்தோடு அப்புறப்படுத்திவிட வேண்டும். நாம் கண்ணிருந்தும் குருடராய் வாழக் கூடாது. அவரைக் கண்குளிர காணவேண்டும் அவருடைய வார்த்தைகளை காதுகுளிர கேட்க வேண்டும்.

பர்திமேயு குருடன் ஆண்டவரைப் பார்த்து ஆண்டவரே நான் பார்வையடைய வேண்டும் என்று கேட்டான். ஏன் தெரியுமா? தேவனைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் தான். இயேசு பார்வை கொடுத்த உடனே முதலாவது அவன் யாரைப் பார்த்து இருந்திருப்பான். இயேசுவைத் தான் பார்த்து இருந்திருப்பான்

இன்று நாம் கண்கள் இருந்தும் குருடராயிருக்கிறோம். அநேகர் சொல்லுகிறார்கள் ஆண்டவருடைய பிரசன்னத்தை உணர முடியவில்லை, அவரைக் காண முடியவில்லை, அவரைத் தரிசிக்க முடியவில்லை என்கிறார்கள்.

நாமும் பர்திமேயு குருடனைப்போல ஆண்டவரிடத்தில் கேட்போம். ஆண்டவரே நான் பார்வை அடைய வேண்டும், உம்மைக் காண வேண்டும். உமது பொன் முக சாயலால் திருப்தியாக வேண்டும்.

ஆம்; தேவனை கண்டு தரிசிக்க நமக்கு பரிசுத்தம் தேவை!

# நாமே தேவனுடைய ஆலயமானதால்...!

''நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்'' (I கொரி 3:16,17).

நாம் ஏன் பரிசுத்தமாய் வாழ வேண்டும்? ஏனென்றால் கர்த்தர் நம்மை தம்முடைய பரிசுத்த ஆலயமாக தெரிந்து கொண்டிருக்கிறார். இதோ மனுஷர் மத்தியில் தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது என்று வெளி 19:2-ல் வாசிக்கிறோமே!

தேவனுடைய பிள்ளைகளே அதை சற்று சிந்தித்துப் பாருங்கள். கர்த்தர் உங்களை ஆலயமாக்கி இருக்கிறார் என்பதை உணர்ந்து பாருங்கள். அவர் உங்களுக்குள் வாசம் செய்கிறார் என்பதை தியானியுங்கள்.

பழைய ஏற்பாட்டின் நாட்களில் அவர் ஆசரிப்பு கூடாரத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தில் தங்கியிருந்தார். அதற்குள்ளே பிரவேசிக்க சாதாரண மனுஷனால் முடியாது. ஆசாரியராலும் முடியாது. பிரதான ஆசாரியன் மாத்திரமே அதுவும் வருஷத்திற்கு ஒரு முறை மட்டுமே மிகுந்த பயபக்தியோடு உள்ளே செல்வார். தன்னை எவ்வளவோ சுத்திகரித்துக்கொண்டு செல்வார். காரணம் என்னவென்றால் ஆண்டவர் அங்கே தங்கியிருக்கிறார். அவருடைய ஷெக்கினா மகிமை அங்கே தங்கியிருக்கிறது.

ஆசரிப்பு கூடாரத்திற்கு பிறகு தேவனுடைய மகிமை சாலொமோன் கட்டிய ஆலயத்தில் இறங்கினது. அந்த ஆலயத்தின் பிரதிஷ்டை ஜெபத்தை சாலொமோன் ராஜா ஜெபித்தபோது தேவனுடைய மகிமை அந்த ஆலயத்தில் இறங்க ஆரம்பித்தது. ஆசாரியர்களால் பணிவிடை செய்ய முடியவில்லை. அந்த ஆலயம் முழுவதிலும் தேவனுடைய மகிமை நிரம்பிவிட்டது.

இன்றைக்கு கர்த்தர் நம்மையே அவருடைய ஆலயமாக தெரிந்து கொண்டிருக்கிறார். நம்முடைய சரீரமே தேவனுடைய வீடு. நமக்குள்ளே அவர் எப்பொழுதும் வாசம்பண்ண விரும்புகிறார். நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்பதை ஆழமாக சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா?,

நம்முடைய தேசத்தில் அநேக கிறிஸ்தவ ஆராதனைகளை நீங்கள் காணலாம். விடியற்காலம் 4 மணிக்கு நடக்கும் விசேஷ ஆராதனையில் அநேகர் டிப்டாப்பாக உடுத்திக் கொண்டு வருவார்கள். பெண்கள் பட்டு சேலை உடுத்தி நிறைய நகைகளைக் கொண்டு அலங்கரித்து வருவார்கள்.

சில ஆண்களின் கைகளிலே சிகரெட்டு புகைந்து கொண்டிருக்கும். ஆனால் ஆலயத்தை நெருங்கும்போது மற்றவர்கள் பார்த்துவிடாதபடி வேகம் வேகமாய் புகையை உறிஞ்சிவிட்டு கீழேபோட்டு தீயை அணைத்து விட்டு ஆலயத்திற்குள் வருவார்கள்.

ஏன் அவர்கள் அந்த சிகரெட்டை அணைக்க வேண்டும்? சிகரெட்டும் கையுமாய் உள்ளே சென்றிருந்திருக்கலாமே. ஏனென்றால் ஆலயம் பரிசுத்தமாய் இருக்கிறது சிகரெட்டுடன் உள்ளே செல்லக்கூடாது என்று அவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் தங்களுடைய சொந்த சரீரமே தேவனுடைய ஆலயமாய் இருக்கிறது என்கிற உணர்வு அவர்களுக்குள் இல்லை. தங்களுக்குள் தேவ ஆவியானவர்

வாசம் பண்ணுகிறார் என்கிற தேவ பயம் அவர்களுக்கு இல்லை.

செப்பனியா 3:17-ஐ வாசித்துப் பாருங்கள். உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர். ஆம், அவர் வல்லமையுள்ளவர் மாத்திரமல்ல பரிசுத்தமுள்ளவர். நமக்குள் வாசம் செய்கிறவர். ஆகவே நம் சரீரத்தை பரிசுத்தத்தோடு பாதுகாத்துக் கொள்ளுவோமா?

தேவனுடைய பிள்ளைகளே, கர்த்தர் உங்களுக்கு ஒரு சரீரத்தைக் கொடுத்திருக்கிறார். உங்களுக்குள் எத்தனை நரம்புகளும், எலும்புகளும், இரத்த அணுக்களும் இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? எத்தனை கோடி கோடி ரூபாய் பெறுமான கம்பியூட்டர்களை எல்லாம் உங்கள் மூளையில் வைத்து அழகாய் இயங்கும்படி செய்திருக்கிறார்.

அவரால் உருவாக்கப்பட்ட அந்த சரீரத்தில் அவர் வாசம் பண்ண வேண்டுமென்று விரும்புவது இயற்கை தானே! நீங்கள் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவர் உங்களைக் கெடுப்பார் அல்லவா? ஆகவே வீணாக உங்கள் சரீரமாகிய ஆலயத்தைக் கெடுத்துவிடாதிருங்கள். இச்சைகளுக்கும் பாவங்களுக்கும் ஒப்புக்கொடுத்துவிடாதிருங்கள்.

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? (I கொரி 6:19).

நீங்கள் உங்களுடையவர்களா? இல்லை. உங்கள் சரீரம் உங்களுடையதா? இல்லை. அது ஆண்டவருடையது. எப்படி ஆண்டவருடையது? அவரே அதை சிருஷ்டித்தார். அவரே இரத்த கிரயம் செலுத்தி மீட்டுக்கொண்டார். ஆகவே அது அவருடையது. நாம் பூமியிலே வாழுகிற

நாட்களெல்லாம் அந்த சரீரத்தில் நாம் குடியிருக்கும்படி அதை நம்முடைய கைகளில் கொடுத்திருக்கிறார். அதை சிற்றின்பங்களுக்கு நாம் விற்றுவிடக்கூடாது. இரகசிய பாவங்களால் சரீரத்தை தீட்டுப்படுத்திவிடக்கூடாது.

அன்றைக்கு இயேசு ஜெப வீட்டிற்குள் பிரவேசித்தார். அங்கு புறா விற்கிறவர்களையும், காசுக்காரரையும் அகற்றினார். சவுக்கை எடுத்து அடித்து துரத்தினார். ஆம், பரிசுத்தத்தின்மேல் அவருக்கு வைராக்கியம் உண்டு. அது பக்தி வைராக்கியம். என்னுடைய வீடு ஜெபவீடு அதை ஏன் கள்ளர் குகையாய் மாற்றினீர்கள் என்றார். இன்று நமது சரீரமே அந்த ஜெபவீடு!

பரிசுத்தவான்கள் எல்லாம் தங்கள் சரீரத்தை தேவனுடைய ஆலயமாகவும் ஜீவபலியாகவும் கர்த்தருடைய கைகளிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். தானியேல் தன் சரீரத்தை அப்படிதான் ஒப்புக்கொடுத்திருந்தார். ஆகவே தான் பாபிலோன் தேசத்து ராஜாவின் திராட்சரசத்தினாலும் ராஜ போஜனத்தினாலும் தன்னை தீட்டுப்பட ஒப்புக்கொடுக்கவே இல்லை. தன்னை காத்துக்கொண்டார்.

தேவபிள்ளையே, எப்போதும் கர்த்தர் உனக்குள் வாசம் பண்ணுகிறார் என்கிற உணர்வை ஏற்படுத்துவாயா? ஆகவே உங்களுக்குள் தங்கியிருக்கிற ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள். ஆவியை அவித்துப் போடாதிருங்கள்.

குழந்தை உண்டாகி இருக்கிற பெண் தனக்குள் குழந்தை இருக்கிறதை எப்போதும் உணருகிறாள். அதற்காக உணவு உண்கிற காரியத்தில் எல்லாம் கவனமாக இருக்கிறாள். குழந்தை வயிற்றில் அசைகிற அசைவு அவளுக்கு தெரிகிறது.

நிறைய கர்ப்பஸ்திரீகள் வயிற்றிலே குழந்தை இருக்கிறதினாலே மாம்பழம் சாப்பிடுவது இல்லை, பலாப்பழ

சாப்பிடுவது இல்லை அவைகள் எல்லாம் குழந்தையின் வளர்ச்சிக்கு கேடு என்று உணர்ந்து தியாகத்தோடு ஒதுக்கிவிடுகிறார்கள்.

கர்த்தர் நமக்குள் தங்கியிருக்கிறார் என்கிற உணர்வு அசுத்தத்தை விலக்குவதற்கு உபயோகமாய் இருக்கட்டும். ஆவியானவர் உள்ளே வாசம் பண்ணும்போது அவர் பார்த்துக்கொண்டிருக்க நாம் பாவம் செய்யலாமா? உங்களுடைய சரீரம் தேவன் தங்கியிருக்கிற மேன்மையான ஆலயமாய் இருக்கிறது அல்லவா?

# சாத்தானை ஜெயிக்கும்படி...!

''ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்''

(வெளி 12:11).

நாம் ஏன் பரிசுத்தமுள்ளவர்களாய் ஜீவிக்க வேண்டும்? ஆம் நாம் பரிசுத்தமுள்ளவர்களாய் ஜீவித்தால்தான் சாத்தானை ஜெயிக்க முடியும். பிசாசை மேற்கொள்ள முடியும். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

பரிசுத்தமாய் வாழாவிட்டால் நம்முடைய மனசாட்சியே நம்மை வாதிக்கிறது. நம் உள்ளமே நம்மை குற்றவாளியாய் தீர்த்துவிட்டால் நம்முடைய நிலைமை என்ன? உற்சாகத்தை இழக்கிறோம். ஆவியிலே பெலன் குன்றி போகிறோம்! ஆம், ஒருவனுடைய மனசாட்சி அவனை வாதிப்பதைப் பார்க்கிலும் வேதனையானது வேறு ஒன்றும் இல்லை.

மனசாட்சி மட்டுமல்ல, சாத்தானும் வாதிப்பான். பாவத்தையும், அருவருப்பையும், துன்மார்க்கத்தையும் வைத்துக்கொண்டு பிசாசை எதிர்த்து நிற்க முடியுமா? ஒருபோதும் எதிர்த்து நிற்க முடியாது நம் ஆவிக்குரிய பெலன் குன்றி பெலவீனப்பட்டு போய்விடுமே. தேவ பிள்ளையே, பரிசுத்தமே நம்முடைய பெலன்.

நான் வாலிபனாய் கல்லூரியில் படித்த நாட்களில் தமிழ் நாட்டில் ஒரு பெரிய பிரசங்கியார் இருந்தார். அவர் மேடையில் வந்து ''இயேசு கிறிஸ்து மாறாதவரே'' என்ற பாட்டை பாடுவார் என்றால் அந்த பகுதியிலுள்ள அத்தனை ஆவிகளும் முன்னால் ஓடி வந்து ஆட ஆரம்பி

கும் பேய்களைத் துரத்துவதிலே அவரைப்போல நான் வேறு யாரையும் பார்த்ததில்லை. அசுத்த ஆவிகள் அவரை நெருங்க முடிவதில்லை. ஐயோ அக்கினி மேலெல்லாம் பற்றி எரிகிறதே என்று சொல்லிக்கொண்டே அந்த ஆவிகள் விலகி ஓடும்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அவர் பாவத்தில் விழுந்தார் துன்மார்க்கமான ஜீவியத்தில் விழுந்தார். அதற்கு பிறகும் அவர் கூட்டங்களை நடத்தினர். ஆனால் அந்தக் கூட்டங்களில் அசுத்த ஆவிகள் அவரை கேலியும் பரியாசமும் செய்து சிரிக்கும். பயப்படுவதில்லை; விலகுவதில்லை; பாருங்கள் ஒரு மனிதன் விழும்போது பேய்கூட அவனை மதிக்கமாட்டேன் என்று சொல்லுகிறது.

அருமையான தேவனுடைய பிள்ளையே, நம்முடைய பெலன் நம்முடைய பரிசுத்தத்தில்தான் இருக்கிறது. தூய்மையான வாழ்க்கைதான் வல்லமையான வாழ்க்கை. நீங்கள் பரிசுத்தத்தை காத்துக்கொண்டு ஜெப ஜீவியத்தில் இருப்பீர்கள் என்றால் மந்திரவாதி பயப்படுவான், அசுத்த ஆவிகள் நடுங்கி ஓடும். சாத்தானல் எதிர்த்து நிற்க முடியாது.

ஒரு முறை பிசாசு பிடித்திருந்த ஒரு சகோதரனை ஒரு ஆலயத்திற்கு கொண்டு வந்திருந்தார்கள். அந்த பிசாசு பயங்கரமாய் ஆடிக் கொண்டிருந்தது. சபை மூப்பர் ஒருவர் அதைத் துரத்துவதற்காக முன்னே வந்தார்.

பிசாசு அவரைப் பார்த்து யோவ், கையை எடு இப்படி நாற்றம் பிடித்த பொடியை வாயிலே வைத்துக்கொண்டு என்னைத் துரத்த வருகிறாயா? முதலாது பொடியை தூரத்திலே எறிந்துவிட்டு அதன் பின்பு என்னிடத்தில் வா என்று சொன்னது தன் குட்டு வெளிப்பட்டுவிட்டதை அறிந்த மூப்பர் அமைதியாய் வெளியே நழுவிவிட்டார்.

கொஞ்ச நேரம் கழித்து அடுத்த மூப்பர் உள்ளே வந்தார். அவர் வந்ததும் பிசாசு சொன்னது உன் அலுவல

கத்திலிருந்து நீ திருடிக் கொண்டுவந்து உன் பெட்டியில் வைத்திருக்கிற மின்சார கம்பிகளை எல்லாம் திருப்பி கொடுத்துவிட்டு வா அதற்கு பிறகு என்னைத் துரத்துகிறதைக் குறித்து சிந்திக்கலாம் என்றது. இப்படி அங்கே வருகிற ஒவ்வொருவருடைய காரியங்களையும் பிசாசு சொல்லிக் கொண்டே இருந்தது.

சகோதரனே, சகோதரியே, உன்னை எப்பொழுதும் இரண்டுபேர் கவனித்துக் கொண்டேயிருக்கிறார்கள். உன் மனைவி உன்னைக் கவனிக்காமல் இருக்கலாம். உன் கணவனார் உன்னைக் கவனிக்காமல் இருக்கலாம் உன் சபை மூப்பர்கள், ஊழியர்கள் உன்னைப் பார்க்காமல் இருக்கலாம். ஆனால் இரண்டுபேர் உன்னைக் கவனிக்கிறார்கள். ஒன்று கர்த்தர்; அடுத்தது சாத்தான்! அவர்கள் உன்னை எப்படிக் காண்கிறார்கள்? பாவத்திலா? அல்லது பரிசுத்தத்திலா?

சாத்தான் இரவும் பகலும் கவனித்துக் கொண்டிருக்கிறான். எந்த விதத்தில் குற்றஞ்சாட்டலாம் என்று வழி தேடிக் கொண்டேயிருக்கிறான். நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ் சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப் போனான் என்று வேதம் சொல்லுகிறது (வெளி 12:10). விசுவாசிகளை எதில் மாட்டி வைக்கலாம், எதிலே சிக்க வைத்து வேடிக்கைப் பார்க்கலாம் என்று அவன் இரவும் பகலும் நம் ஆத்துமாவுக்கு கண்ணிகளை வைத்துக்கொண்டே இருக்கிறான்.

அநேகம் பேருக்கு பரிசுத்த ஜீவியம் இல்லை. மனசாட்சி வாதிக்கிறதினாலே ஆவிக்குரிய பெலன் குன்றி தடுமாறுகிறார்கள். பில்லி சூனியங்களை எதிர்த்து போராட முடியவில்லை. சாத்தானுடைய வல்லமைகளை கட்டி ஜெயம் பெற முடியவில்லை. சோதனைகளையும், நோய்களையும் வரவழைத்துக்கொண்டு அதிலிருந்து விடுதலை பெற வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

தேவபிள்ளையே, நீ பரிசுத்த ஜீவியம் செய்வாயானுல் உன் குடும்பத்தை சாத்தானுடைய தாக்குதலிலிருந்து காத்துக்கொள்ள முடியும்.

சாட்சியின் ஜீவியந்தான் பரிசுத்த ஜீவியம். சாட்சியின் வசனத்தினுலும் அவனை ஜெயித்தார்கள் என்று வேதம் சொல்லுகிறதை கவனித்துப் பாருங்கள். தேவபிள்ளையே, உன் வாழ்க்கையை செப்பனிட்டு சாட்சியின் ஜீவியத்தை காத்துக்கொள். சாத்தானை ஜெயிக்க வேண்டுமென்ருல் வாழ்க்கையில் பரிசுத்தத்தின் சாட்சி அவசியம்.

ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும் (மத் 24:14).

சாட்சியில்லாமல் பிரசங்கிக்கப்படும் சுவிசேஷத்திஞல் எந்த பிரயோஜனமும் இல்லை. ஒரு ஆத்துமாவும் இரட்சிக்கப்பட முடியாது. அணைந்த மெழுகுவர்த்தியைக் கொண்டுபோய் அடுத்த மெழுகுவர்த்தியை பற்ற வைக்க முடியுமா? ஒரு போதும் முடியாது.

நம்முடைய வாழ்க்கையின் சாட்சியின் ஜீவியத்தை இழந்துவிட்டு மற்றவர்களை கர்த்தருக்கென்று ஆதாயம் பண்ணுவது எப்படி? தேவபிள்ளையே, சாத்தானை ஜெயிக்க உங்களுக்கு பரிசுத்தம் தேவை.

## அத்தியாயம் 7

# அற்புதங்களை பெறுவதற்கு!

''யோசுவா, ஜனங்களை நோக்கி: உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள்; நாளைக்குக் கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான்''

(யோசுவா 3:5).

நாம் ஏன் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும்? ஆம் பரிசுத்தமான வாழ்க்கை இருந்தால்தான் அவரிடத்தில் அற்புதங்களை எதிர்பார்க்க முடியும். மனிதன் தேவனிடத்தில் வரும்போது அவர் அற்புதத்தை செய்ய மாட்டாரா? என்று எதிர்பார்க்கிறான். கர்த்தர் மனிதனிடத்தில் வரும் போதெல்லாம் மனிதன் பரிசுத்தமாய் வாழமாட்டானா? என்று எதிர்பார்க்கிறார்.

அநேகர் சொல்லுகிறது என்ன? கர்த்தர் என் குடும்பத்தில் இந்த அற்புதத்தை செய்தால் நான் அவரை ஏற்றுக்கொள்ளுவேன் எனக்கு நல்ல வேலைக் கிடைத்தால் கிறிஸ்துவை சேவிப்பேன் எனக்கு ஆண் பிள்ளை பிறந்தால் குடும்பமாக அவரை ஏற்றுக்கொள்ளுவோம் என்று சொல்லுகிறார்கள், தீர்மானிக்கிறார்கள்.

ஆனால் தேவனுடைய வசனம் என்ன சொல்லுகிறது? முதலாவது உங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். பிறகு கர்த்தரிடத்திலிருந்து அற்புதத்தை எதிர்பாருங்கள்.

முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத் 6:33) தேவனுடைய நீதிதான் அவருடைய பரிசுத்தமாகும்.

நான் சமீபத்தில் எழுப்புதல் பெருவிழாவுக்கு செல்ல ஆயத்தமானபோது அதை ஒழுங்கு செய்திருந்த சகோதரர்கள் எனக்கு எழுதியிருந்த கடிதத்தில், ''ஐயா ஜனங்கள்

அற்புதங்களை எதிர்பார்க்கிறார்கள், தெய்வீக சுகத்தையும், வல்லமையையும், விடுதலையையும் எதிர்பார்க்கிறார்கள். தீர்க்கதரிசனங்களை எதிர்பார்க்கிறார்கள். ஆகவே ஆயத்தத்தோடு வாருங்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆம், தேவனுடைய ஜனங்கள் கர்த்தரிடத்திலிருந்து எப்போதும் அற்புதத்தை எதிர்பார்க்கிறார்கள்.

அதே நேரத்தில் நாம் கர்த்தரிடத்தில் முழங்கால்படியிட்டு ஆண்டவரே ஜனங்கள் அற்புதத்தை எதிர்பார்க்கிறார்கள் நீர் கண்டிப்பாய் அற்புதங்களை செய்தே தீர வேண்டுமென்று கேட்கும்போது அவர் என்ன சொல்லுகிறார்? ''நான் அற்புதங்களைச் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன் என் ஜனங்கள் பாவ வழிகளை விட்டு பரிசுத்தமாய் ஜீவிக்க ஆயத்தமாய் இருக்கிறார்களா?''

யோசுவாவின் நாட்களில் இஸ்ரவேல் ஜனங்கள் அற்புதங்களை எதிர் பார்த்தார்கள். ஏன் தெரியுமா? அவர்களுக்கு முன்பாக கானான் தேசம் இருந்தது. கானானுக்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால் யோர்தானைக் கடக்க வேண்டும். யோர்தானில் அறுப்புகாலம் மட்டும் பெரு வெள்ளங்கள் பொங்கி வரக்கூடும்.

பெரியவர்களோ, சிறியவர்களோ அதில் இறங்கி குறுக்கே நடந்து வர முடியாது. அப்படி யோர்தானைக் கடந்து வந்தாலும் அங்கே ஏழு கொடிய ஜாதிகளையும், முப்பத்தியொரு பலமுள்ள ராஜாக்களையும் அவர்கள் எதிர் நிற்க வேண்டும்.

அவர்களை ஜெயிக்க வேண்டுமென்றால் கர்த்தர் அற்புதம் செய்தால்தான் முடியும். யோர்தானின் சவால்களை மேற்கொள்ளவும், கானானைச் சுதந்தரித்துக்கொள்ளவும் நிச்சயமாகவே கர்த்தருடைய அற்புதங்கள் தேவை.

ஆகவேதான் யோசுவா ஜனங்களைப் பார்த்து நீங்கள் உங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள். கர்த்தர் அற்புதத்தைச் செய்வார் என்றார்.

வேதம் சொல்லுகிறது நீங்கள் கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார்; நீங்கள் அவரைத் தேடினால், உங்களுக்கு வெளிப்படுவார்; அவரை விட்டீர்களே யாகில், அவர் உங்களை விட்டுவிடுவார் (II நாளா 15:2).

அன்றைக்கு இஸ்ரவேல் ஜனங்கள் தங்களை பரிசுத்தம் பண்ணிக்கொண்ட போது கர்த்தர் அற்புதத்தைச் செய்தார். உடன்படிக்கை ஏந்திய ஆசாரியர்கள் யோர்தானில் கால் வைத்தபோது யோர்தான் பின்னிட்டு திரும்பியது இஸ்ரவேல் ஜனங்கள் சந்தோஷமாய் ஆரவாரத்தோடு யோர்தானை கடந்தார்கள்.

வேதத்தில் எண்ணற்ற உதாரணங்களை உங்களுக்குச் சொல்ல முடியும். எலியா கர்மேல் பர்வதத்தின்மேல் நின்றபோது முதலாவது அந்த பலிபீடத்தை செப்பனிட்டார் பலிபீடத்தை செப்பனிடுவது என்பது என்ன அர்த்தம்? அது பரிசுத்தப்படுத்துவது என்பதாகும் நம் வாழ்க்கையில் உடைந்து கிடக்கிற பலிபீடங்கள் செப்பனிடப்பட்டு சரி செய்யப்படும்போது கர்த்தர் நிச்சயமாகவே அற்புதத்தை செய்வார். அன்று எலியா ஜெபித்த போது உடனே அற்புதம் நிகழ்ந்தது. வானத்திலிருந்து அக்கினி இறங்கி வந்தது.

தேவபிள்ளையே, உன் வாழ்க்கையில் அற்புதத்தைச் செய்ய ஆயத்தமாய் இருக்கிறார். நீ ஏன் சோர்ந்து போய் இருக்கிறாய்? உன் வாழ்க்கையில் அநேக அவமானங்கள், நிந்தைகள் ஏற்பட்டிருக்கிறதா? உன் குடும்பத்தார் இரட்சிக்கப்படாததினால் நீ மனம் கலங்கி போய் இருக்கிறாயா? பிரச்சனைகளும், போராட்டங்களும், நாளுக்கு நாள் அதிகமாகி கொண்டு வருகிறதா? உடனே கிறிஸ்துவின் பாதத்தில் அமர்ந்து உங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்.

யோர்தானை பின்னிட்டு திரும்பப்பண்ணி இஸ்ரவேலரை கடந்து போகும்படி செய்து அற்புதங்களை நிகழ்த்தியவர் நிச்சயமாகவே உன் வாழ்க்கையில் அற்புதத்தைச் செய்வார்.

அவர் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் செய்கிறவர்
(யோபு 9:10).

1913-ம் ஆண்டு வேல்ஸ் தேசத்தில் பெரிய எழுப்புதல் ஏற்பட்டது. ஏறக்குறைய ஆறு மாதங்களுக்குள் ஒன்றரை லட்சம் மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள். சாராய கடைகள் எல்லாம் மூடப்பட்டது. நாடக சாலைகள் அடைக்கப்பட்டது. ஜனங்கள் மனம் திரும்பினார்கள். போலீஸ் ஸ்டேஷனுக்கு இடமே இல்லை. சிறைசாலைகள் எல்லாம் வெறுமையானது. பொய் சொல்லுவதற்கு, களவு செய்வதற்கு ஆட்களே இல்லை.

காரணம் என்ன தெரியுமா? தன்னை பரிசுத்தமாக்கிக் கொண்ட ஒரு தேவனுடைய மனிதன்தான். அவருடைய பெயர் ஈவான் ராபர்ட்ஸ் என்பதாகும்.

ஒரு முறை அவர் ஊழியத்திற்காக குதிரையின் மேல் ஏறிச் சென்று கொண்டிருந்தார். பாதி வழியில் ஆவியானவர் தடுத்து நிறுத்தினார். மகனே சற்று பொறு. குதிரையை விட்டு இறங்கி உன்னை சுத்திகரித்து பரிசுத்தமாகுவதற்கு தனியாக கடந்து வா என்று அழைத்தார்.

அந்த தேவனுடைய ஊழியக்காரரர் உடனே குதித்து அருகிலிருந்த மரங்கள் நிறைந்த சோலைக்குள் சென்று முழங்கால்படியிட்டு இருதயத்தை கிழித்து ஆண்டவரே என்னை முழுவதும் சுத்திகரியும், உமக்கேற்ற பாத்திரமாக்கும், அக்கினி ஜுவாலையாக்கும் என்று சொல்லி இரண்டு மூன்று மணி நேரங்கள் தொடர்ந்து ஜெபித்தார். மீண்டும் அவர் அந்த குதிரையின் மேல் ஏறினார்.

முடிவில் அவர் பிரசங்கம் பண்ண வேண்டிய இடம் வந்தது. அவர் பிரசங்கத்தை ஆரம்பிப்பதற்கு முன்பதாகவே பரிசுத்த ஆவியின் அக்கினி ஜனங்கள்மேல் விழ ஆரம்

பித்தது. எல்லாரும் ஆவியிலே நிரப்பப்பட்டார்கள். கர்த்தர் பெரிய அசைவை கட்டளையிட்டார். ஏராளம் அற்புதங்கள் நடந்தன.

தேவபிள்ளையே, உன்னைச் சுத்திகரித்துக்கொள்ளும்போது கர்த்தர் உன்னைக்கொண்டு பல அற்புதங்களை செய்வார். உனக்கு இப்பொழுதே தேவை பரிசுத்தம்.

# வருகையில் காணப்பட...!

''அவனுடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்'' (வெளி 19:7).

நாம் ஏன் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும்? ஆம், கர்த்தருடைய வருகையில் காணப்பட நமக்கு பரிசுத்தம் மிகவும் அவசியம். பரிசுத்தமுள்ள ஆத்தும நேசரைச் சந்திக்க பரிசுத்த மணவாட்டியாய் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டாமா?

நாம் ஒவ்வொருநாளும் கர்த்தருடைய வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய பிள்ளைகள் அனைவரோடும்கூட வரும்போது நாம் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக பிழையற்ற பரிசுத்தவான்களாய் இருப்பது அவசியம் அல்லவா? அப்படி பரிசுத்தமுள்ளவர்களாய் இருந்தால் மகிழ்ச்சியோடும் சந்தோஷத்தோடும் அவருக்கு எதிர்கொண்டு போக முடியும்.

கரைதிரையற்ற பரிசுத்தம், பிழையற்ற பரிசுத்தம், தேவன் எதிர்பார்க்கும் பரிசுத்தம் நம்மில் காணப்படட்டும். ஆகவேதான் ஆண்டவர் பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்று சொல்லுகிறார். அந்த பரிசுத்தத்திற்காக நாம் ஆயத்தப்படுத்திக்கொள்ளுவோமா?

ஒரு மாணவன் முழு ஆண்டு தேர்வுக்காக அந்த வருஷம் முழுவதும் ஊக்கமாக படித்து ஆயத்தமாகுகிறான். அப்படி ஆயத்தமாயிருந்தால் அவன் தைரியத்தோடு பரீட்சைக்கு செல்லுவான். எல்லா கேள்விகளுக்கும் சரியாய் பதில் எழுதுவான். உற்சாகத்தோடு வெளியே வருவான்.

அதைப்போல யுத்தத்திற்காக ஒரு ராஜா ஆயத்தமாய இருந்தால் வீரதீரமாய் யுத்தம் செய்வான், அவனுடைய எல்லா படைவீரர்களும் முழு தைரியத்தோடும் முன்னேறு வார்கள். வெற்றி பெறுவார்கள்!

அதைப்போலவே கிறிஸ்துவினுடைய வருகைக்கு ஆயத்தத்தோடு காத்திருந்தால் ஆமென் கர்த்தராகிய இயேசுவே வாரும் என்று அவருக்கு எதிர்கொண்டு செல்ல முடியும்.

வானத்தில் தொனிக்கிற தொனி என்ன? பரிசுத்த முள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் இதோ, சீக்கிர மாய் வருகிறேன் என்பதே.

நாம் பரிசுத்த மணவாட்டியாக அழைக்கப்பட்டவர் கள். உங்களை கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு கற் புள்ள கன்னியாக நியமித்திருக்கிறேன் என்று அப்போஸ் தலனாகிய பவுல் கூறுகிறார்.

நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பரிசுத்தத்தில் பூரணமுள்ளவர், மகிமையில் பூரணமுள்ளவராய் இருக் கிறதுபோல நாமும் மகிமையின் மேல் மகிமையடைந்து பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தமடைந்து பூரணத்தை நோக்கி முன்னேறிச் செல்லுவோமா!

கர்த்தருடைய வருகை மிகவும் சமீபமாகிவிட்டது. இயேசுகிறிஸ்து பிதாவின் மகிமை பொருந்தினவராய் பதி னாயிரமான தேவதூதர்களோடுகூட பரிசுத்தவான்களோ டும்கூட சீக்கிரமாய் வந்தருளுவார்.

வேதம் சொல்லுகிறது: ''கர்த்தர் சீனாயிலிருந்து எழுந் தருளி, சேயீரிலிருந்து அவர்களுக்கு உதயமானார்; பதினா யிரங்களான பரிசுத்தவான்களோடே பிரசன்னமானார்''

(உபா 33:2).

ஆம், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வரும்போது எல்லா பரிசுத்தவான்களும் வருவார்கள்.

வேதத்தில் எழுதப்பட்ட ஒவ்வொரு பரிசுத்தவான்களையும் முகமுகமாய் சந்திப்போம்.

என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள். அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார் (சகரி 14:5,9). தேவபிள்ளையே, அந்த மகிமையின் நாட்களுக்காக பரிசுத்தமாய் ஆயத்தப்படு.

வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் (தானி 7:27).

தேவபிள்ளையே, அவருடைய வருகையிலே காணப்பட பரிசுத்தத்தை காத்துக்கொள்ளுங்கள். இரண்டு காரியங்கள் எப்போதும் நம்மை எதிர்நோக்கி நின்று கொண்டிருக்கிறது. ஒன்று ஆண்டவருடைய வருகை, அடுத்தது நம்முடைய மரணம். இந்த இரண்டில் எது வேண்டுமென்றாலும் எந்த நேரத்திலும் சந்திக்கக்கூடும். நம்முடைய மரணமானாலும், கர்த்தருடைய வருகையானாலும் தேவனைச் சந்திக்க நாம் ஆயத்தப்படுவோமாக

கர்த்தருடைய வருகையில் அவர் தம்முடையவர்களை கூட்டி சேர்ப்பார் பலியினாலே என்னோடு உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள் என்பார் (சங் 50:5)

இதில் எத்தனைமுறை ''என்னுடைய; என்னுடைய'' என்று ஆண்டவர் சொல்லுகிறார் என்று கவனித்துப் பாருங்கள். மூன்றுமுறை அவர் அப்படி சொல்லுகிறார். பலியினாலே என்னுடனே உடன்படிக்கை பண்ணின பரிசுத்தவான்கள். எந்த பலியினாலே? கல்வாரி சிலுவையிலே நமக்காக பலியான இயேசுவினாலே.

ஆம், அவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டவர்கள்தான் அவருடைய வருகையில் காணப்படுவார்கள். அந்த வருகையின் நாட்களின் போது கர்த்தர் தம் தூதர்களுக்குக் கட்டளையிட்டு சொல்லுகிறார் என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்.

தேவதூதர்கள் பூமியின் ஒரு மூலையிலிருந்து மறுமுனைவரையுள்ள பரிசுத்தவான்களை அந்நாளிலே கூட்டிசேர்ப்பார். தேவனுடைய பிள்ளையே, நீ அந்தக் கூட்டத்தில் காணப்படுவாயா?

வருகையில் காணப்பட பரிசுத்தம் அவசியம்!

# பரலோகத்தில் பிரவேசிக்க...!

''உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரி கத்தைப் பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களி லும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்''
(தானி 7:18).

நாம் ஏன் பரிசுத்தமாய் ஜீவிக்க வேண்டும்? ஆம், பர லோக ராஜ்யத்தில் பிரவேசிக்க நமக்கு பரிசுத்தம் மிகவும் அவசியம். பரலோக ராஜ்யத்தை வேதம் பரிசுத்தவான் களின் ராஜ்யம் என்று அழைக்கிறது. பரிசுத்தமாய் ஜீவிக் கிறவர்கள் மாத்திரமே உட்பிரவேசிக்க முடியும்.

பரலோக ராஜ்யத்தைப் பாருங்கள் அங்கு நூற்றுக்கு நூறு பரிசுத்தம். பரிசுத்தமுள்ள தேவதூதர்கள் அங்கு உண்டு, பரிசுத்தமுள்ள கேருபீன்கள் சேராபீன்கள் உண்டு, ஆயிரம் பதினாயிரம் பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அங்கே உண்டு.

பரலோகம் முழுக்க முழுக்க பரிசுத்தமானது. அங்கே பிதாவின் பரிசுத்தத்தைப் பார்க்கிறோம். குமாரனாகிய இயேசுவின் பரிசுத்தத்தைப் பார்க்கிறோம் பரிசுத்த ஆவி யானவரின் பூரண சாயலைப் பார்க்கிறோம். அசுத்தங்கள் அங்கே நுழைய முடியாது.

வேதம் சொல்லுகிறது: தீட்டுள்ளதும் அருவருப்பை யும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக் குட்டியானவரின் ஜீவ புஸ்த கத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப் பார்கள் (வெளி 21:27). ஆம், அங்கே பாவம் கொஞ்ச மேனும் இருப்பதில்லை, இருளின் ஆதிக்கங்கள் கிரியை செய்வது இல்லை. அந்தகார சக்திகள் உட்புகுவது இல்லை.

பரலோகம் என்பது குப்பைத் தொட்டி அல்ல. வேசிக் கள்ளரும் அருவருப்பான வாழ்க்கை வாழுகிறவர்களும் உட்பிரவேசிக்க முடியாது. மனம்போல வாழ்ந்து விட்டு பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவேன் என்று ஒருவன் நினைத்தால் அவன் தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளுகிறான் என்றுதான் அர்த்தம்.

வேதம் கேட்கிறது: யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே

(சங் 15:1,2).

யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்? யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைநிற்பான்? கைகளில் சுத்தமுள்ளவனும் இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து தன் ஆத்துமாவை மாயைக்கு ஒப்புக்கொடாமலும் கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே

(சங் 24:3,4).

பரலோகத்தில் பிரவேசிக்கவிடாமல் சாத்தான் உலக ஆசை இச்சைகளைக் காண்பித்து பாதாளத்தை நோக்கி இழுக்கிறான். அவனுடைய வழியில் செல்லுகிறவர்கள் நித்தியத்திற்குள் செல்ல முடியாது. பரலோகத்தை விட்டு விட்டால் பாதாளமும் அக்கினி கடலும் தான் பங்காகக் கிடைக்கும்.

தேவபிள்ளையே, பரிசுத்தத்திற்காக போராடு. பரிசுத்தத்திற்காக முயற்சி செய். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார்: ''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்''

(IIதீமோ 4:7,8).

அந்த கிரீடத்தை கர்த்தர் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு மாத்திரமல்ல, பரிசுத்தமாய் ஜீவித்து ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடிக்கிற ஒவ்வொருவருக்கும் தந்தருளுவார். தேவனுடைய பிள்ளையே, பரிசுத்தப்படு

நம்முடைய அழைப்பு பரிசுத்த அழைப்பு ஆகவே பரிசுத்தப்படுங்கள்.

நம்மை அழைத்தவர் பரிசுத்தமுள்ளவர். ஆகவே நாம் பரிசுத்தப்படுவோம்

நம் தேவனைத் தரிசிக்கும்படியாக வாழ்க்கையை பரிசுத்தப்படுத்திக் கொள்ளுவோம்.

நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம், தேவனுடைய ஆவியானவர் நம்மிலே தங்கியிருக்கிறார். ஆகவே பரிசுத்தத்திற்கு ஒப்புக் கொடுப்போம்.

சாத்தானுடைய வல்லமைகளை தகர்க்கும்படி நாம் பரிசுத்தப்படுவோமாக.

அற்புதங்களை பெற்றுக் கொள்ளுவதற்கு நமக்கு பரிசுத்தம் மிகவும் அவசியம்.

கர்த்தருடைய வருகையிலே காணப்படவும், கர்த்தருடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவும் நமக்கு பரிசுத்தம் மிகவும் அவசியம்.

## எமது பிரசங்க புத்தகங்கள்!

| | | | |
|---|---|---|---|
| 313. | கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்! | 5 | 00 |
| 314. | துதியின் வாசல்கள்! | 5 | 00 |
| 315. | பரலோகத்தின் வாசல்! | 5 | 00 |
| 316. | ஆவியின் நான்கு அனுபவங்கள்! | 5 | 00 |
| 317. | அப்படியே மறுபடியும் வருவார்! | 5 | 00 |
| 318. | இரட்சணியத்தைக் கண்டேன்! | 5 | 00 |
| 319. | கர்த்தர் உங்கள் முன்னே போவார்! | 5 | 00 |
| 320. | அஸ்திபாரங்களுள்ள நகரம்! | 5 | 00 |
| 321. | வருகையின் உவமானங்கள்! | 5 | 00 |
| 322. | இயேசு நமக்காக எப்படி ஜெபிக்கிறார்? | 5 | 00 |
| 323. | சுவிசேஷத்தின் திறவுகோல்கள்! | 5 | 00 |
| 324. | தேவனுடைய ஐசுவரியங்கள்! | 5 | 00 |
| 325. | காயம்கட்டும் இயேசு! | 5 | 00 |
| 326. | சிலுவையின் மேன்மை என்ன? | 5 | 00 |
| 327. | அரைகள் கட்டப்படட்டும்! | 5 | 00 |
| 328. | எலும்புகள் உயிரடையுமா? | 5 | 00 |
| 329. | சிலுவையும் தேவ பெலனும்! | 5 | 00 |
| 330. | அடைக்கப்பட்ட தோட்டம்! | 5 | 00 |
| 331. | என்னவெல்லாம் நமக்கு உண்டு? | 5 | 00 |
| 332. | ஆவிக்குரிய வஸ்திரங்களை உடுத்திக் | 5 | 00 |
| | கொள்ளுங்கள்! | 5 | 00 |
| 333. | எல்ஷடாய்! | 5 | 00 |
| 334. | மகா ஞானமுள்ளவைகள்! | 5 | 00 |
| 335. | ஒருவருக்கும் தூரமானவர் அல்ல! | 5 | 00 |
| 336. | மிகவும் அன்புகூர்ந்தாளே! | 5 | 00 |
| 337. | இதோ வாழ்க்கையை வனைகிறார்! | 5 | 00 |
| 338. | சகோதரர்களின் ஐக்கியம்! | 5 | 00 |
| 339. | மூன்று அப்பங்கள்! | 5 | 00 |
| 340. | அபிஷேக எண்ணெய்! | 5 | 00 |
| 341. | இருளிலிருந்து வெளிச்சத்திற்குள்! | 5 | 00 |
| 342. | ஏன் பரிசுத்தமாக வேண்டும்? | 5 | 00 |
| 343. | திரியேக தேவனின் பரிசுத்தம்! | 5 | 00 |
| 344. | வார்த்தையில் பரிசுத்தம்! | 5 | 00 |
| 345. | தன்னை சுத்திகரித்துக் கொண்டால்...! | 5 | 00 |
| 346. | பரிசுத்தம் ஒரு கூட்டு முயற்சி! | 5 | 00 |

## ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்தும பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 400 க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. ஜெபத்துரை அவர்கள் இந்நூலையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர், தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!


புஸ்தகங்கள் கிடைக்கும் இடம்:

சாம் ஜெபத்துரை, M. A.

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.


